# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2455/29 - 2025 සැප්තැම්බර් මස 25 වැනි බ්‍රහස්පතින්දා - 2025.09.25

*2455/29 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 25 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

ச.வ.பீ.-24/1951(xiv)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 237 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் பிரிவுகள் 141, 143, 144, 157அ, 168 மற்றும் 190 என்பவற்றின் கீழ் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானசேவைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பிமல் நிரோஷன் ரத்னாயக்க,**
போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்
மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர்.

கொழும்பு,
2025.09.25.

**ஒழுங்குவிதிகள்**

2018, சனவரி 15 ஆந் திகதிய 2054/ 8 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2011, ஓகத்து 03 ஆந் திகதிய 1717/14 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, மோட்டார் வாகன (கடுகதிப்பாதை) ஒழுங்குவிதிகள் அதன் 8 ஆம் ஒழுங்குவிதியினை உடனடுத்துப் பின்வரும் ஒழுங்குவிதிகளை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றன :-

"8அ. கடுகதிப் பாதை ஒன்றில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனம் ஒன்றின் சாரதியும் அம் மோட்டார் வாகனத்தின் ஏதேனும் ஆசனத்தில் அமர்ந்து பயணஞ் செய்யும் ஒவ்வொரு பயணியும் மற்றும் தனியாளும்




*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அத்தகைய மோட்டார் வாகனம் கடுகதிப் பாதையில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் வேளையில், ஒழுங்குவிதி 8உ வில் குறித்துரைக்கப்பட்ட வகையான தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டியை அணிதல் வேண்டும்.

8ஆ. மோட்டார் வாகன ஒன்றின் சாரதி அத்தகைய மோட்டார் வாகனமானது, அதன்கண் ஆசனத்தில் அமர்ந்து பயணிக்கும் சாரதியும் ஒவ்வொரு பயணியும் மற்றும் தனியாளும் அணியவேண்டிய ஒழுங்குவிதி 8உ வில் குறித்துரைக்கப்பட்டதான முறையான தொழிற்பாட்டுடனான தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டியானது பொருத்தப்பட்டிருந்தாலொழிய, கடுகதிப் பாதையில் அத்தகைய மோட்டார் வாகனத்தை ஓட்டுதலோ அல்லது பயன்படுத்தலோ ஆகாது.

8இ. மோட்டார் வாகனமொன்றின் சொந்தக்காரர் ஒருவர் அத்தகைய மோட்டார் வாகனமானது அதன்கண் ஆசனத்தில் அமர்ந்து பயணம் செய்யும் சாரதி, ஒவ்வொரு பயணி மற்றும் தனியாள் என்போரால் அணியக்கூடிய முறையான தொழிற்பாட்டுடனான 8உ என்னும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டதான தனியாள் பாதுகாப்பு ஆசனப் பட்டிகள் பொருத்தப்பட்டாலொழிய கடுகதிப் பாதையில் அத்தகைய மோட்டார் வாகனத்தை பிரவேசித்தல் அல்லது பிரவேசிக்கச் செய்தலாகாது.

8ஈ. (1) மோட்டார் வாகனங்களின் பின்வரும் வகுப்புக்கள் தொடர்பில் ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவற்றின் ஏற்பாடுகளின் ஏற்புடைமையானது ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பன நடைமுறைக்கு வரும் தேதியிலிருந்து மூன்று மாதங்கள் பூர்த்தியானதன் பின்னர் நடைமுறைக்கு வருதல் வேண்டும் :-

(அ) ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பின்புற மத்திய ஆசனத்திற்கு 8உ என்னும் ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்பட்டவாறு உற்பத்தியாளரால் தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டி பொருத்தப்பட்டிருக்காத கடுகதிப்பாதையில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் அல்லது பிரவேசிக்கும் மோட்டார் கார் ஒன்றின் சாரதி அல்லது சொந்தக்காரர் ;

(ஆ) ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பின்புற மத்திய ஆசனங்களுக்கு அல்லது பல்வேறு பின்புற ஆசனங்களுக்கு ஒழுங்குவிதி 8உ இல் குறித்துரைக்கப்பட்டவாறு உற்பத்தியாளரால் தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டி பொருத்தப்படாதிருக்கும் கடுகதிப்பாதையில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் அல்லது பிரவேசிக்கும் இலகுரக மோட்டார் வண்டி, மோட்டார் வண்டி, கனரக மோட்டார் வண்டி, இரட்டை நோக்க வாகனம், இலகுரக மோட்டார் லொறி, கனரக மோட்டார் லொறி அல்லது மோட்டார் மனை வாகனம் ஒன்றின் சாரதி அல்லது சொந்தக்காரர் ;

(இ) ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவை நடைமுறைக்கு வரும் நேரத்தில் பின்புற மத்திய ஆசனங்களுக்கு அல்லது பல்வேறு பின்புற ஆசனங்களுக்கு ஒழுங்குவிதி 8 இல் குறித்துரைக்கப்பட்டவாறு உற்பத்தியாளரால் தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டி பொருத்தப்படாதிருக்கும் கடுகதிப்பாதையில் ஓட்டப்படும் அல்லது பயன்படுத்தப்படும் அல்லது பிரவேசிக்கும் நாளாந்த அலுவலக போக்குவரத்து சேவையில் அல்லது பாடசாலை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடும் இரட்டை நோக்க வாகனம், இலகுரக மோட்டார் வண்டி, மோட்டார் வண்டி, கனரக மோட்டார் வண்டிஎனபவற்றின் சாரதி அல்லது சொந்தக்காரர் ;

(2) ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ என்பவற்றின் ஏற்பாடுகள் பின்வருவனவற்றிற்கு ஏற்புடையனவாதலாகாது :-

(அ) பன்னிரெண்டு வயதிற்கு குறைந்த சிறுவர்கள் மற்றும் 135 சென்ரிமீற்றர்கள் உயரத்தை விஞ்சாத ஆட்களுக்கு ;

(ஆ) 2011, ஓகத்து 09 ஆந் திகதிய 1718/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட ஒழுங்குவிதிகளினால் திருத்தப்பட்டவாறான 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மோட்டார் வாகன (ஆசனப் பட்டிகள்) ஒழுங்குவிதிகளிற்கான II ஆம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் வழங்கப்பட்டதும் அத்துடன் ஆசனப்பட்டி ஒன்றை அணிவது எவரேனும் ஆளுக்கு மருத்துவரீதியாக பொருத்தமற்றது என்பதை குறிப்பிட்டு பதிவு செய்யப்பட்ட மருத்துவ தொழிலர் ஒருவரினால் கையொப்பமிடப்பட்டதுமான வலிதான மருத்துவச் சான்றிதழ் ஒன்றை வைத்திருக்கின்ற எவரேனும் ஆளுக்கு ; அத்துடன்

(இ) அவசரகால சேவை வாகனங்களில் பயணிக்கும் பயணிகள்.

8உ. எந்த மோட்டார் வாகனத்திற்கு ஒழுங்குவிதிகள் 8அ, 8ஆ மற்றும் 8இ ஏற்புடையதாகின்றதோ அந்த மோட்டார் வாகனம் ஒவ்வொன்றிலும் பொருத்தப்பட வேண்டும் என தேவைப்படுத்தப்படுகின்றதான தனியாள் பாதுகாப்பு ஆசனப்பட்டியின் வகை பின்வருமாறு இருத்தல் வேண்டும் :-

(அ) சாரதி ஆசனப் பட்டியானது மூன்று நங்கூரப் புள்ளிகளைக் கொண்டதும், மேல்நோக்கி போகும் வார் ஒன்றையும் மற்றும் உடலின் குறுக்கே பக்கவாட்டின் போகும் வாரையும் கொண்டதுமான ஒரு நியம ஆசனப்பட்டி ஒன்றாக இருத்தல் வேண்டும் ; அத்துடன்

(ஆ) முன் நிரையிலுள்ள ஆசனங்கள் உட்பட ஏனைய ஆசனங்களுக்கான ஆசனப்பட்டிகள் ஆசனங்களின் வடிவமைப்பின் மீது குறைந்தது இரண்டு நங்கூரப் புள்ளிகளுடன் உடலின் குறுக்கே பக்கவாட்டில் போகும் வாரினைக் கொண்ட நியம ஆசனப்பட்டி ஒன்றாக இருத்தல் வேண்டும்.

8ஊ. ஒழுங்குவிதி 8ஈ உப ஒழுங்கு விதி (2) இல் ஏற்பாடு செய்யப்பட்டவை தவிர, 2011, ஓகத்து 09 ஆந் திகதிய 1718/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2011 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க மோட்டார் வாகன (ஆசனப் பட்டிகள்) ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகள் கடுகதிப் பாதையில் ஓட்டப்படும் அல்லது பாவிக்கப்படும் அல்லது பிரவேசிக்கும் மோட்டார் வாகனங்களின் சாரதிக்கு அல்லது சொந்தக்காரருக்கு ஏற்புடையதாதலாகாது.”.

EOG 09-0239

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.